அடையாள இலக்கம்:

D

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2016

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) கீழே தரப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக** (5 புள்ளிகள்)

1. கோவில் ____________ + ____________
2. குறைவகற்றி ____________ + ____________
3. சொற்பெருக்கம் ____________ + ____________
4. மனச்சான்று ____________ + ____________
5. அன்புணர்ச்சி ____________ + ____________

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு எதிர்ப்பொருள் கொண்ட சொற்களை எழுதுக.**

(5 புள்ளிகள்)

1. அன்பு -- ____________
2. இன்சொல் -- ____________
3. அண்மை -- ____________
4. நண்பன் -- ____________
5. பூட்டுதல் -- ____________

**(இ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் கோடிடப்பட்டுள்ள இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

(10 புள்ளிகள்)

1) கண்ணை இமை காப்பது போலத் தாய் தன் ________________________ வளர்த்தாள்.

2) பணத்தைத் திருடிய ____________________ காவலாளர்கள் துரத்திப் பிடித்தார்கள்.

3) நேற்று வீசிய கடும் புயலால் பலர் தம் வீடுகளை ____________________ தவிக்கின்றனர்.

4) கார்மேகத்தைக் கண்ட மயில் ______________________ விரித்து ஆடியது.

5) மல்லிகை மலரின் ________________________ அனைவரையும் கவர்ந்தது.

6) பல மாதங்களாக மழை பெய்யாததால் குளங்கள் ______________________.

7) பொம்மை வாங்கித் தரும்படி அடம் பிடித்துக் குழந்தை __________________.

8) நாம் __________________________ இருந்து பெற்ற புத்தகத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளே திருப்பிக் கொடுக்க வேண்டும்.

9) நாட்டியம் பயிலும் மாணவர்களின் பட்டமளிப்பு அவர்களின் நடன ________________________________ நிகழ்வில் நிகழும்.

10) குடியிருப்பதற்கான வீடுகளை வாங்க வங்கிகள் ________________________ உதவி அளித்து ஆதரவு நல்கின்றன.

**(ஈ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொற்களின் கீழே கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒரு **குறிக்கோள்** இருக்கவேண்டியது அவசியம்.

   அ. விருப்பம் ஆ. இலட்சியம் இ. பிடிப்பு ஈ. எண்ணம்

2. தமிழ் மொழியின் **தொன்மை** பற்றி அறிய விரும்புகிறவர்கள் பழந்தமிழ் இலக்கியங்களைப் பயில வேண்டும்.

   அ. இனிமை ஆ. மேன்மை இ. பெருமை ஈ. பழைமை

3. பழங்காலத் தமிழ் மன்னர்கள் பலர் அறநெறி **பிறழாது** ஆட்சி செய்தமையை இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிய முடிகிறது.

   அ. இல்லாது ஆ. தவிர்த்து இ. குறைந்து ஈ. தவறாது

4. சான்றோர்கள் உலகில் **அமைதி** நிலவ வேண்டும் என்று விரும்புகிறவர்கள்.

   அ. சமாதானம் ஆ. தெளிவு இ. கொந்தளிப்பு ஈ. சண்டை

5. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றினால் குடும்பத்தில் அமைதி **குலையும்**.

   அ. தளரும் ஆ. வளரும் இ. சிதையும் ஈ. கூடும்

6. அன்னை திரேசாவின் தன்னலமற்ற தொண்டுக்கு இந்த **ஞாலமே** தலை வணங்கியது.

   அ. நாடே ஆ. உலகமே இ. கண்டமே ஈ. இயற்கையே

7. கண்ணன் உண்மையை ஒத்துக் கொண்டதனாலேதான் சுதா மீது சுமத்தப்பட்ட **மாசு** நீங்கியது.

   அ. களங்கம் ஆ. பெருமை இ. தன்னலம் ஈ. அச்சம்

8. மூன்றாம் **பிறை** காண்பது கடினம்.

   அ. சந்திரன் ஆ. இளமதி இ. நிலா ஈ. பாதிமதி

9. பிரச்சனைகளைச் சண்டையின்றிச் **சுமுகமாக** முடித்துவிடுவதே கற்றவர்களுக்கு அழகு.

   அ. தர்க்கரீதியாக ஆ. கூட்டமாக இ. இணக்கமாக ஈ. இரைச்சலாக

10. பொருளாதார நெருக்கடியின் விளைவாகப் பலர் **அத்தியாவசியச்** செலவுகளையும் குறைத்துக் கொண்டுள்ளனர்.

    அ. ஆடம்பர ஆ. அதிக இ. மிகவும் தேவையான ஈ. விழாக்கால.

**(உ) கீழே தரப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் பாவித்து அதன் பொருள் விளங்கக் கூடியதாகச் சரியான வசனம் அமைக்கவும்.** (20 புள்ளிகள்)

**அ. கூரை :** ..........................................................................

..........................................................................

**கூறை :** ..........................................................................

..........................................................................

**ஆ. மனம் :** ..........................................................................

..........................................................................

**மணம் :** ..........................................................................

..........................................................................

**இ. உளவு :**..........................................................................

..........................................................................

**உழவு :**..........................................................................

..........................................................................

**ஈ. ஒலி :**..........................................................................

..........................................................................

**ஒளி :**..........................................................................

..........................................................................

**உ. காலை :**..........................................................................

..........................................................................

**காளை :**..........................................................................

..........................................................................

## பகுதி 2

**(ஊ) பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்தபின் கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.** (25 புள்ளிகள்)

ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த அறிஞர்கள், தம் அருமுயற்சியாற் பெற்ற அறிவுச்செல்வத்தை வருங்கால மக்களுக்குப் பயன்படும் பொருட்டு நூல்களாக எழுதிவைத்தனர். இவையே பிற்காலத்தவர்கள் போற்றும் அறிவுச் சுரங்கங்கள். இந்நூல்களைத் தொகுத்து வைக்கப்பட்ட இடங்கள் நூல் நிலையங்கள் என்று பெயர் பெற்றன. நாகரிகம் மிக்க சகல நாடுகளிலும் நூல் நிலையங்கள் இருந்தன. அவற்றை அந்நாட்டு மக்களும் அரசர்களும் கண்போலக் காத்து வந்தனர்.

உரோமப் பேரரசு மிக உயர்ந்த நிலையில் இருந்த காலத்தில் 'கான்ஸ்டாண்டினோபிள்' என்ற இடத்தில் மிகப்பெரிய நூல் நிலையம் ஒன்று இருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டில் துருக்கியர் உரோம இராச்சியத்தின்மீது படையெடுத்துச் சென்றபோது உரோமர்கள் அந்நூல் நிலையத்திலிருந்த விலை மதிப்பற்ற இலக்கியச் செல்வங்களை எடுத்துக்கொண்டு மேற்குத் திசை நோக்கிச் சென்றனர். அதனால் அந்த இலக்கியச் செல்வங்களை ஐரோப்பிய மக்கள் பலரும் அறிவதற்கு வாய்ப்பாய் அமைந்தது. அதன் விளைவாகவே ஐரோப்பிய நாடுகளில் மறுமலர்ச்சி தோன்றிற்று என மேனாட்டு மொழி வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். இந்நாள்களிலும் நூல் நிலையங்கள் ஒரு நாட்டின் நாகரிகத்தை மதிப்பிடுவதற்குரிய அளவுகோலாகக் கருதப்படுகின்றன.

இத்தகைய அறிவுச் சுரங்கத்தை மக்கள் அடைவதற்குரிய வழிகள் இரண்டு. அவை கற்றல், கேட்டல் என்பனவாம். ஒருவன் ஒரு நூலைத் தானே வருந்திக் கற்பது கற்றல் எனப்படும். ஆனால் கேட்டல் என்பது கற்றறிந்த பெரியோர் வாயிலாக அரிய நூற்பொருளைக் கேட்பது ஆகும். ஒருவர் கேட்கும் போது, அந்நூலைத் தனியாகக் கற்கும் போது அவருக்கு ஏற்படும் ஐயங்கள் யாவும் நீங்கி அறிவு விளக்கமடைகிறது. தானே முயன்று ஒன்றைக் கற்பது எளிதான செயலன்று. அதற்குக் காலமும் அதிகம் வேண்டும். நல்லாசிரியர்களிடம் பாடம் கேட்கும் போது அவர்கள் கேட்போர் தகுதியறிந்து அதனை வழங்கி, அவரது உள்ளத்தில் பசுமரத்தாணிபோலப் பதிய வைப்பர். இக்காரணங்களாலேதான் 'கற்றலிற் கேட்டல் இனிது' என்ற பொருளுரை எழுந்தது.

மனிதனது அறிவு வளர்வதற்கும் உள்ளம் பண்பட்டு வாழ்க்கை சிறப்பதற்கும் கல்வி கேள்விகளினும் சிறந்த கருவி வேறில்லை. இதனாலேயே ஒவ்வொரு நாட்டிலுமுள்ள அறநூல்களும் கல்வி கேள்விகளின் அவசியத்தை நன்கு வற்புறுத்தி வந்துள்ளன. திருவள்ளுவரின் திருக்குறளும் கல்வியின் சிறப்பைப் பற்றிக் கூறுவனவற்றை நாம் நினைவிற் கொள்ளுதல் நல்லது. மனிதனின் உடலிலிருக்கும் உறுப்புகளிலே கண்கள் மிக முக்கியமானவை. அவை அவனுக்குப் பார்வையையும் அழகையும் அளிக்கின்றன. கண்ணற்ற குருடர்களது அவல நிலை யாவரும் அறிந்ததே. இத்துணை முக்கியத்துவம் வாய்ந்த கண்களைப் பெற்றவன் என்று ஒருவன் சிறப்பிக்கப்பட வேண்டுமானால் அவன் கல்வி கற்றவனாக இருக்க வேண்டும். கல்வியறிவில்லாத ஒருவனது முகத்திலிருக்கும் கண்கள், கண்கள் அல்ல; அவை புண்களே என்று வள்ளுவர் கூறுகின்றார்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. நூல்கள் எதற்காக எழுதப்படுகின்றன?

2. துருக்கியர் படையெடுப்பால் ஏற்பட்ட விளைவு யாது?

3. கேட்டலின் பயன் என்ன?

4. நல்லாசிரியர் பாடங்களை எவ்வாறு கற்பிப்பார்?

5. திருவள்ளுவர் கல்வி பற்றி என்ன கூறுகின்றார்?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**(எ) கீழே தரப்பட்ட குறிப்புக்களை வாசித்து அதற்கமைய ஒரு கட்டுரையையோ அல்லது ஒரு கடிதத்தையோ எழுதுக.**

(25 புள்ளிகள்)

1) அவுஸ்திரேலியாவில் வசிக்கும் தமிழ் மாணவர்கள் பலர் தமிழ் படிப்பதில்லை. அவர்கள் தமிழ் படிப்பதை ஊக்குவிக்க நாம் எடுக்கக்கூடிய வழிமுறைகளை விபரித்துச் சஞ்சிகை ஒன்றுக்கு 200 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக?

**அல்லது**

2) வெளிநாடு சென்று வருவதற்கு வசதியற்ற நண்பனுக்கு அவுஸ்திரேலிய நாட்டிற்குள்ளேயே பார்த்து மகிழக்கூடிய இடங்கள் பற்றியும் அவற்றின் சிறப்புக்கள் பற்றியும் விபரித்து 200 சொற்களுக்குக் குறையாது ஓர் கடிதம் எழுதுக.

**விடைத்தாள் - எ)**